REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: கார்த்திகை 3உ சனி (19—11—55) ★ ★ வெளியீடு: கார்த்திகை 4உ ஞாயிறு (20—11—55) [இதழ் 135

இந்தியாவில் ரஷ்ய உருக்குத் தொழிற்சாலை

திட்டம் தயாராகிவிட்டதாகத் தகவல்

லண்டன், நவ. 18—

இந்தியாவில் ஒரு பெரும் தொழிற்சாலையை நிறுவுவதற்கு சோவியத் நிபுணர்கள், திட்டத்தினைத் தயாரித்துவிட்டதாக மாஸ்கோ வானொலி அறிவித்திருக்கிறது.

ஆண்டுதோறும் 10 இலட்சம் டன் உருக்கு உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலையை அமைக்கவே ரஷ்ய நிபுணர்கள் திட்டமிட்டிருக்கின்றனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

'ஆலமரத்தின் விழுது மாணவர் கழகம்'

'பொறுப்புமிக்கவர்கள் இத்தலைமுறை மாணவர்'

'சிந்தித்துச் செயல்படுவீர்'

மாணவர் மாநாட்டில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன்

" திராவிட முன்னேற்றக் கழகம் நேரடியாகவே அரசியலில் கலந்துகொள்கிறது; ஆனால், திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் நேரடியாக அரசியல் நடவடிக்கைகளில் இறங்காது. திராவிட முன்னேற்றக் கழகம், நாட்டிற்கு எதிர்ப்படும் எல்லா பணிகளையும்—நாட்டை எதிர்நோக்கியிருக்கிற எல்லா பிரச்சினைகளிலும் கவனம் செலுத்தி முன்னின்று நடத்தித் தரும்; ஆனால், திராவிட மாணவர் முன்னேற்றக் கழகமும், அதன் உறுப்பினர்களாகிய திராவிட மாணவ முன்னேற்றக் கழகத்தினரும், தங்களது கல்வி கெடாத முறையில், படிப்பு பாழ்பட்டுப் போய்விடாதவகையில் நாட்டுக்குத் தேவையான நல்ல பணிகளில் ஈடுபடும்.

" திராவிட முன்னேற்றக் கழகம் ஓங்கி வளர்ந்த ஆலமரத்தைப் போன்றது; திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம், அந்த ஆல மரத்தினின்றும் தொங்கிக்கொண்டிருக்கிற உறுதியான விழுதுகளுள் ஒன்றாகும். ஆல மரம் மட்டும்தான் பூத்து, காய்த்து, பழம் தரும்; ஆனால், விழுது பூக்காது—காய்க்காது—பழமும் தராது.

" அதுபோலவேதான் திரரவிட மாணவர் முன்னேற்றக் கழகம், ஆல மரத்திற்கு வலு கொடுக்கும் விழுதைப்போல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருந்து, நல்ல பக்கபலமும் ஆதரவும் தருகிறது.

" மாணவர்கள் அரசியலில் நேரடியாகக் கலந்துகொள்ளாமல் இருக்கும்போதே, நல்ல—தெளிந்த அரசியல் அறிவும் பெற்றிருக்க வேண்டும் என்பதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தாகும்.

" இந்த நாட்டைப் பொறுத்தவரையில், மாணவர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிற பொறுப்புக்கள் ஏராளம். சில ஆண்டுகளுக்கு முன்னே, அல்லது, இன்னும் சில ஆண்டுகளுக்குப் பின்னே இருக்கும் மாணவர்களைவிட, இப்போது—இந்தத் தலைமுறையிலே உள்ள தற்கால மாணவர்களுக்குத்தான் அதிக மதிகமான பொறுப்புக்கள் சிக்கிக் கிடக்கின்றன; அவர்கள், இந்த நாட்டிற்குச் செய்ய வேண்டிய தங்களின் நற்பணியின் பங்குதான் மற்ற மாணவர்களைவிட மிகமிக அதிகம்—பெரிது; ஏனெனில், முன்னுள் மாணவர்களும், பின்னால் வருகிற மாணவர்களும் செய்யாத ஒன்றை, இப்போதிருக்கிற—இந்தத் தலைமுறை மாணவர்கள் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றனர். அதுதான் இந்த நாட்டுக்கு விடுதலை வாங்கித்தரும் மிகப் பெரும் பொறுப்பும், பணியுமாகும்.

" நாட்டுக்கு விடுதலை வாங்கித்தரும் பொறுப்புடன் மட்டுமல்ல—மொழி ஆர்வம் மிகுந்த இந்தக் காலத்தில் தாங்கள் பயிலுகின்ற பாடங்களில் உள்ள ஆங்கிலச் சொற்களுக்குச் சரியான—நேரான தமிழ்ச் சொற்களை நமக்குத் தெரிவிக்கவேண்டியவர்களும் அவர்களாகத்தான் இருக்கின்றனர்.

" நாட்டின் விடுதலைக்காக சிறந்த ஆற்றலையும், வலுவையும், ஆர்வத்தையும், தொழில்துறை போன்ற பிறதுறைகளில் உள்ள தொழிலாளத் தோழர்கள் நமக்குக் கொடுக்க, அதே நேரத்தில் மாணவர்கள் தங்கள் படையினைத் திரட்டி, நமக்கு அறிவுத்துறையில் உதவி செய்யும்போது, திராவிட முன்னேற்றக் கழகம் தனது பங்கினை—நாட்டுக்குச் செய்யவேண்டிய தனது பணியைத் திறம்படச் செய்யும். இந்த இருவகையிலும், ஆற்றலும், வலுவும் கொண்ட படையினரும், அறிவுப் படையினரும் ஒருங்கே திரண்டெழுந்து, நாடு விடுதலை பெறவேண்டுமென்று எண்ணினால், நிச்சயம் அன்றே நாம் திராவிட நாட்டை அடைந்தே தீருவோம்."

—என்று தி.மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை கோகலே மண்டபத்தில், 19—11—55 காலை 9 மணியளவில் நடைபெற்ற திராவிட மாணவ முன்னேற்றக் கழக இரண்டாவது மாநில மாநாட்டினைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

(அவரது பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்)

திங்களன்று கடையடைப்பு

பம்பாயில் போராட்டம்

சம்யுக்த மராட்டியம் கோரி நடவடிக்கை

பம்பாயைத் தலைநகராகக் கொண்டு சம்யுக்த மராட்டியம் அமைக்கவேண்டும் என்பதற்காக வரும் நவம்பர் 21-ந் தேதியன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தமும், கடையடைப்பும் நடத்துவதென 'சம்யுக்த மராட்டிய பரிஷத்'தின் செயற்குழு முடிவு செய்திருப்பதாக, செயற்குழு உறுப்பினரான பி. பி. வைத்தியா என்பவர் பம்பாயில் நேற்று அறிவித்திருக்கிறார்.

திராவிட மாணவர் போர் முரசு

சென்னையில் 2-வது மாநில மாநாடு

மாநிலமெங்கிருந்தும் மாணவர் திரண்ட காட்சி

சென்னை, நவ. 19—

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு சென்னை கோகலே மண்டபத்தில், இன்று காலை 9 மணியளவில் துவங்கிற்று.

மாநாட்டிற்குத் தோழர் கே. ஏ. மதியழகன் தலைமை தாங்கினார்.

மாநாட்டில், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், அண்ணாதுரை, தி. மு. கழக துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் ஆகியோரும் மற்றும் பல தோழர்களும் கலந்துகொண்டனர்.

மண்டபம், கழகக் கொடிகளாலும், தோரணங்களாலும் கண்ணைக்கவரும்வகையில் அழகு செய்யப்பட்டிருந்தது. மண்டபம் முழுவதும், மாணவத் தோழர்கள் பெருந்திரளாலும், மற்றும் பொதுமக்களாலும் நிரம்பிவழிந்தது.

மாநாட்டுத் துவக்கத்தில் தோழர் சீனுவாசன் இரண்டொரு இயக்கப் பாடல்கள் பாடியபின்னர், தோழியர் ஜி. கஸ்தூரி அவர்களது இசை விருந்துடன் மாநாடு துவங்கிற்று.

மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் பொன்னுவேலு, மாநாட்டில் கலந்துகொண்ட தோழர் அண்ணாதுரை, தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், மாநாட்டுத் தலைவர் கே. ஏ. மதியழகன் ஆகியோரையும், மற்றுமுள்ள தோழர்களையும், மாணவத் தோழர்களையும் பொதுமக்களையும் வரவேற்றுப் பேசினார்.

பின்னர், தி.மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மாநாட்டினைத் திறந்து வைத்து, மாணவர்கள் கடமை குறித்து அரியதோர் உரை நிகழ்த்தினார்.

பின்னர், வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் பொன்னுவேலு அவர்கள், மாநாட்டுக்குத் தலைமை வகித்துத் தருமாறு தோழர் மதியழகன் அவர்களை முன்மொழிந்தார். அதனை வழி மொழிந்து, சென்னை சட்டக் கல்லூரித் தோழர் வி. சிவப்பிரகாசம், மதுரை நகர் தி. மா. மு. கழகத் தோழர் பாண்டியன், புதுக்கோட்டை தி. மா. மு. கழகத் தோழர் நாகராசன், சென்னை பச்சையப்பன் கல்லூரித் தோழர் விசுவநாதன், கா. அறிவழகன், சென்னை பச்சையப்பன் கல்லூரித் தோழர் சு. ஆறுமுகம் ஆகியோர், தோழர் மதியழகன் அவர்கள் தமது கல்லூரி காட்சியிலிருந்து—கடந்த 10 ஆண்டுக் காலமாக இன்றுவரை திராவிட இயக்கத்தின் வளர்ச்சிக்காக, தளராத ஆர்வத்துடனும், சலியா உழைப்புடனும் ஆற்றிவரும் அரும் பெரும் தொண்டினை எடுத்துக் கூறிப் பேசினர்.

பின்னர், தலைவர் தோழர் மதியழகன் தலைமையுரை ஆற்றினார்.

அடுத்துத் தோழர்கள் சி. என். அண்ணாதுரை, என். வி. நடராசன் ஆகியோர் பேசினர்.

அண்ணா அவர்கள் பேசுகையில், திராவிட மாணவர்களின் கடமை குறித்தும், நாட்டுக்கு அவர்கள் செய்யவேண்டிய நற்பணி குறித்தும், மாணவத் தோழர்களுக்குச் சிறந்த முறையில் அறிவுரை கூறும் வகையில் அரியதோர் உரை நிகழ்த்தினார். (ந-வி.)

ரஷ்யத் தலைவர்களுக்கு மகத்தான வரவேற்பு

டில்லி நகரில் திருவிழாக் கோலம்

புதுடில்லி, நவ. 18—

சோவியத் ரஷ்யப் பிரதமர் மார்ஷல் நிகோலாய் புல்கானின், கம்யூனிஸ்டு கட்சி முதல் செயலாளர் நிகிதா குருஷ்சேவ் ஆகியோர் இன்று பகல் 2-30 மணிக்கு பாலம் விமான நிலையம் வந்தடைந்தபோது, பல்லாயிரக்கணக்கான மக்களின் மகிழ்ச்சி ஆரவாரப் பேரொலிக்கிடையே பிரதமர் பண்டித நேருவும், குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணனும், அவர்களை எதிர்கொண்டழைத்து வரவேற்றிருக்கின்றனர்.

நூறு மைலுக்கப்பாலிருந்தே 12 - இந்திய விமானங்கள் ரஷ்யத் தலைவர்களை ஏற்றிவந்த விமானத்திற்குக் காவலாக அணிவகுத்து அழைத்து வந்தன.

டில்லி நகர் முழுதும் திருவிழாக் கோலம் பூண்டிருந்தது.

விமான நிலையத்தில் பல நாட்டு அரசியல் தூதுவர்களும் கூடியிருந்தனர். இந்திய சர்க்கார் மந்திரிகளும் தலைமை அதிகாரிகளும் கூடியிருந்தனர்.

விமான நிலையத்திற்கு வெளியே பல்லாயிரம் மக்கள் கூடி இருந்தனர்

இதுவரை வேறு எந்த வெளிநாட்டுத் தலைவர் வந்தபோதும் டில்லி மக்கள், இத்தனை பெரும் உற்சாகம் காட்டியதில்லை என்று எல்லாப் பத்திரிகைகளும் எழுதியிருக்கின்றன.

விமான நிலையத்தில் இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட பின், அயல்நாட்டு இராஜதந்திரிகள், தூதுவர்கள் இந்தியப் பேரரசின் மூலவர்கள் எல்லாம், புல்கானின், குருஷ்சேவ் ஆகியோருக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டனர்.

கூடியிருந்த மக்கள் மலர்மாலைகளை வீசி எறிந்தும், மலர் இதழ்களைத் தூவியும், ரஷ்ய, இந்தியக் கொடிகளை ஏந்தியும் வரவேற்றிருக்கின்றனர்.

விமான நிலையத்தில் பண்டித நேரு, காஷ்மீரிலிருந்து வரவழைக்கப்பட்ட விசேடமான மலர் மாலைகளை அணிவித்து மகிழ்ந்திருக்கிறார்.

12 மைல் ஊர்வலமாக வந்த ரஷ்யத் தலைவர்கள், 'ராஷ்டிரபதி பவனி'ல் தங்கினர். பின்னர் ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே, பிரதமர் நேருவை அவரது இல்லத்தில் சந்தித்து சுமார் 45 நிமிடங்கள் உரையாடினர்.

தமிழ் நாட்டுக் கலை நிகழ்ச்சி இல்லை

அதன் பின்னர், 'ராஷ்டிரபதி பவனத்'தில் ஒரு கதம்ப நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; சுமார் 90 நிமிடங்கள் வரை சோவியத் தலைவர்கள் அந்த நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனர்.

செரிசேலா, இராஜஸ்தான், ஐதராபாத், சௌராஷ்டிரா, மணிப்பூர், டில்லி, ஆந்திரா, கேரளா பகுதிகளிலிருந்து வரவழைக்கப்பட்ட கிராமிய நடன, இசைக் குழுவினர் அந்தக் கலை நிகழ்ச்சிகளில் பங்குகொண்டனர்.

தமிழ் நாட்டுக் கலைக் குழுவினர், அந்த நிகழ்ச்சியில் இடம் பெறவில்லை.

இந்தியிலேயே எல்லாம்!

கலை நிகழ்ச்சி முடிவில் சோவியத் பிரதமர் புல்கானின் நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றோருக்கு நன்றி தெரிவித்து, தான், நிகழ்ச்சியை அநுபவித்ததாக 'இந்தி மொழி'யில் பேசியிருக்கிறார்.

மேலும் அவர், விமான நிலையத்திலிருந்து ஊர்வலமாக வரும்போது கூட்டத்தினரைக் கைகூப்பி வணங்கி, 'நமஸ்தே' என்று இந்தியில் வணக்கம் தெரிவித்தாராம்.

இராணுவ அணிவகுப்பின் போது, இந்தி மொழியிலேயேதான் உத்தரவுகள் தரப்பட்டதாயும் தெரிய வருகிறது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 19—11—'55 சனி

நால்வர் மாநாடு

ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நான்கு வல்லரசுகளின் வெளிவிவகாரத் துறை அமைச்சர்கள் ஜினீவாவில் கூடி, கடந்த மூன்று கிழமைகளாக, உலகில் அமைதி நிலவச் செய்வதற்காகத் தீர்வு காணப்பட வேண்டிய அவசிய—அவசரமான சிக்கல்கள் குறித்து விவாதித்துவிட்டு, தங்களால் சிக்கலுக்குப் பரிகாரம் தேட முடியவில்லை என்று அறிவித்துவிட்டனர்.

ஜெர்மன் ஐக்கியம், ஐரோப்பியப் பாதுகாப்பு, ஆயுதப் பரிகரணம், கிழக்கு - மேற்கு நாடுகளின் தொடர்பை—உறவை வளர்த்தல் ஆகியவை குறித்து மாநாட்டில் கலந்துகொண்ட வல்லரசு அமைச்சர்கள், தங்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளைத் தெரிவித்திருப்பதின் மூலம், மாநாட்டின் தோல்வியை வெளிப்படையாக்கியிருக்கின்றனர்.

மாநாட்டின் மூலம் சிக்கல்களுக்கு உருவான தீர்வு எதும் காணப்பட முடியாதுபோய்விட்டாலும், சிக்கல்கள் குறித்து ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நிலையைத் தெரிவித்திருப்பது, உலகத்தோர், அவர்களைப் புரிந்துகொள்வதற்கு வழிசெய்ததாக அமைந்திருக்கிறது.

பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய மேற்கு வல்லரசுகள் ஒருதரப்பாகவும், ரஷ்யா தனித்தும் இந்த மாநாட்டில், சிக்கல்கள் தீரத் தங்கள் திட்டங்களைத் தந்திருக்கின்றன.

மேற்கு வல்லரசுகள், தங்களிடையே இயற்கையாகத் தோன்றி வளர்ந்துவரும் ஆபத்தான விளைவுகளை உள்ளடக்கிய முரண்பாடுகளையும் மறந்து ஒன்றுபட்டு, 'உலக சமாதானமே தங்கள் குறிக்கோள்' என்ற ஒலி முழக்கத்துடன் ரஷ்யாவைப் 'பணிய' வைக்க முயன்றிருக்கின்றன.

சோவியத் ரஷ்யாவும், தனது இலட்சியக் கனவெல்லாம் 'உலக மக்களின் சுபிட்சமும், நல்வாழ்வுமேதான்' என்ற முரசொலியுடன், மாநாட்டில் தனது நிலையை விளக்கியிருக்கிறது.

சிக்கல்கள் ஒவ்வொன்றிற்கும் இருதரப்பாரும் தங்களின் திட்டங்களைத் தாக்கல் செய்வதும், மறுதரப்பினர் அதை நிராகரித்துவிட்டுத் தங்கள் திட்டத்தை முன்வைப்பதும், அதனை ஏற்க இதரர் மறுப்பதும் என்ற நிலையிலேயே மாநாடு நடைபெற்றிருக்கிறது. இருதரப்பினரில் எவரும் சிறிதும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை கொண்டவர்களாயிருக்கவில்லை.

'ஜெர்மன் துண்டுபட்டு, கிழக்கு-மேற்கு என்று பிரித்தாளப்படும் வரையில், ஐரோப்பாவில் பாதுகாப்பு ஏற்படச் சந்தர்ப்பம் இருக்க முடியாது. எனவே, பிளவுபட்ட ஜெர்மனி ஒன்றுபட்டாகவேண்டும்; அதற்கு முதற்படியாக, இரண்டு ஜெர்மனிகளிலும் சுதந்திரமாகத் தேர்தல் நடத்தவேண்டும்,' என்று மேற்கு வல்லரசுகள் கோரியிருக்கின்றன. இதற்காக, ரஷ்யாவிற்குப் பாதுகாப்புத் தரும் சில உறுதிமொழிகளை வழங்குவதாயும பிரிட்டிஷ் அமைச்சர் தெரிவித்தார்.

ஆனல், ரஷ்யா, 'முதலில் ஐரோப்பாவில் மேற்கு வல்லரசுகள், ஏற்படுத்தி வைத்திருக்கும் இராணுவக் கூட்டுக்களான வட அட்லாண்டிக் ஒப்பந்த நிறுவனத்தையும் மேற்கு ஐரோப்பிய இணைப்பையும் கலைத்துவிட வேண்டும்' என்றும், 'ஜெர்மனியில் தேர்தல் நடத்துவதை ரஷ்யா ஏற்க முடியாது' என்றும் தெரிவித்தது.

ஜெர்மன் மீண்டும் ஒன்றுபடுவதை ரஷ்யா விரும்பவில்லை என்பது, ரஷ்ய அமைச்சரின் வாதத்திலிருந்து தெளிவானது என்றும், அதற்குக் காரணம், ஜெர்மனியில் தேர்தல் நடைபெற்றால், ஐரோப்பாவில், கம்யூனிச 'ஆதிக்கம்' அழிந்துபடும் என்பதுதான் என்றும் மாநாட்டினைக் கூர்ந்து கவனித்துவந்த சில நடுநிலையாளர்கள் அறிவிக்கும் கருத்தை முழுவதும் தவறுடையது எனக் கொள்வதற்கில்லை!

அதே போல நடுநிலையாளர்கள், ஐரோப்பாவில் ஏற்கனவே தங்களுக்கிருக்கும் செல்வாக்கை நிலையானதாக்கிக் கொள்வதற்கென்று உருவாக்கி வைத்திருக்கும் பலம் வாய்ந்த இராணுவக் கூட்டமைப்புகளைக் கலைக்க மறுக்கும் மேற்கு வல்லரசுகளின் பிடிவாதத்தின் உள்நோக்கத்தையும் கண்டிக்காமல் இல்லை.

இப்படி, ஜெர்மன் ஐக்கியம் குறித்து இருதரப்பாரிடையேயும் ஒரு ஒருமைப்பாடு ஏற்படாதபோது, அதனுடன் மிக நெருங்கிய தொடர்புடைய 'ஐரோப்பியப் பாதுகாப்பு' எனும் சிக்கல் குறித்து, நீண்ட விவாதத்திற்கு இடமே இல்லாது போய்விட்டதில் ஆச்சரியமில்லை.

ஆயுதப் பரிகரணம் குறித்து ஐ. நா. நிறுவனம் நீண்டகாலமாகவே தனது கவனத்தைச் செலுத்தி வந்தும் உருவான பலன் எதும் காண முடியாத நிலையில் நான்கு வல்லரசு அமைச்சர்களும் அது குறித்து விவாதித்தபோது தோல்வி கண்டதும் வியப்பிற்குரியதல்ல!

மேற்கு-கிழக்கு நாடுகளிடையே உறவை வளர்த்துக்கொள்ளும் விஷயமும் இதாவற்றைப் போன்றே 'பரஸ்பர' நிராகரிப்பில்தான் நின்றிருக்கிறது.

இருதரப்பினரும், ஒருவருக்கொருவர் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வது என்றும், சுதந்திரமாக மற்ற நாட்டவரை நடமாட அனுமதிப்பது என்றும் அமெரிக்க மந்திரி திட்டம் தந்திருக்கிறர்.

இம்மாதிரிச் செய்ய அனுமதிப்பது, தீவிரமான போர்ப் பிரச்சாரம் செய்யவும், அணு ஆயுதத் தாக்குதல்களுக்குத் தூண்டவும் தான் பயன்படும் என்று கூறி, ரஷ்யா, திட்டத்தை நிராகரித்திருக்கிறது.

இப்படி இரு தரப்பாரும், உலக சமாதானம் காப்பதே தங்கள் குறிக்கோள் என்று கூறிக்கொண்டே ஜினீவாவில் கூடி, சிக்கல்களை இருந்த இடத்திலேயே நிறுத்திவிட்டு, தாங்கள் மட்டும் 'ஓடிப் பிடித்து' விளையாடி யிருக்கின்றனர் — என்று, மாநாட்டு முடிவுகளை ஆவலுடன் எதிர்நோக்கிய நிருபர் ஒருவர் குறிப்பிட்டிருப்பது நகைத்தற்குரியதல்ல — சிந்தனைக்குரியது!

வடநாட்டவரிடை செல்வாக்கு போட்டி!

'உத்திர பிரதேசத்தைத் துண்டாடுக! மத்திய பிரதேசத்தைப் பெரிதாக்குக!'

பிரதேசக் காங்கிரஸ் தலைவர் இரகசியக் கடிதம்

குவாலியர், நவ. 16—

"மத்தியப் பிரதேச மாநிலத்தை, மாநில சீரமைப்புக் குழு சிபாரிசு செய்திருப்பதற்கும் அதிகமாக விரிவாக்கவேண்டும்' என்று மத்திய பாரத் காங்கிரஸ் தலைவரான கன்னையலால் காதிவாலா என்பார், காங்கிரஸ் தலைவர் தேபருக்கு எழுதியுள்ள இரகசியக் கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறாராம்.

உத்திர: பிரதேசத்திலிருந்து ஜான்சி, லலித்பூர் மாவட்டங்களையும், இராஜஸ்தானிலுள்ள ஜலவார், பிரதாங்கர், பவானி மண்டிப் பகுதிகளையும், குழு சிபாரிசு செய்துள்ள இதரப் பகுதிகளுடன் சேர்த்து பெரியதோர் மத்திய பிரதேச மாநிலம் அமைக்கவேண்டும் என்று அவர் தனது இரகசியக் கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

சட்ட சபையில் தூங்கிவிழுந்த மந்திரி!

மாநில புது அமைப்பு திட்டம் பற்றிய விவாதம்

உறுப்பினர்கள் பேசத் தயாரில்லாதால் ஒத்திவைப்பு

ஷில்லாங், நவ. 16—

'மாநில புனரமைப்புக் குழு அறிக்கை அசாம் சட்டசபையில் விவாதிக்கப்பட வேண்டும்' என்று முதன் மந்திரி விஷ்ணுராம் மெத்தி அறிக்கை ஒன்றை வாசித்தபோது, மந்திரி சபையின் கருத்துக்கு மாறுபட்ட கருத்துக் கொண்டிருக்கும் மந்திரி ஒருவர் தூங்கிக் கொண்டிருந்தாராம்.

மாநிலக் குழுவின் அறிக்கைப்படி, இப்போதைய அசாமுடன் திரிபுரா என்ற 'சி' பிரிவு மாநிலம் மட்டும் சேர்க்கப்படும்; மணிப்பூர் தனியாகவே இருக்கும்; அதே போல, வடகிழக்கு எல்லைப்புற ஏஜென்சி அப்படியே இருக்கும்; இதுவே அசாம் சர்க்காரின் விருப்பமுங்கூட!

ஆனல், ஜெ ஜெ.எம் நிகோலஸ் ராய் என்ற மந்திரி, 'அசாம், மணிப்பூர், திரிபுரா இந்தப் பகுதிகளின் மலைவாழ் சாதி மக்களுக்கென ஒரு தனி மாநிலம் அமைக்க வேண்டும்,' என்று விரும்புகிறர். இதற்காக இவர் அண்மையில் டில்லி சென்று பிரதமர் நேருவிடமும், இதரர்களிடமும் குன்றப் பிரதேச மாநிலம் ஒன்று அமைக்க வேண்டியதின் அவசியம் குறித்து எடுத்துரைத்து விட்டு வந்தாராம்.

இந்த மந்திரிதான், முதன் மந்திரி விஷ்ணுராம் மெத்தி மாநிலக் குழுத் திட்டம் குறித்து விவாதிக்க வேண்டுமென்று சட்டசபையில் கோரியபோது தூங்கி வழிந்து கொண்டிருந்தாராம்!

பின்னர், மாநிலக் குழு சிபாரிசு குறித்து எவருமே சட்டசபையில் பேசுவதற்குத் தயாராக இல்லை என்பதினல், எதிர்க் கட்சியினர் வேண்டுகோளின்படி, சபைத் தலைவர் மாநிலத் திட்ட விவாதத்தை ஒத்தி வைத்திருக்கிறர்.

தவணை முறையில் இயந்திரங்கள்

சிறு தொழில் வளர்ச்சிக்கு சர்க்கார் உதவி

சென்னை, நவ. 17—

சிறிய தொழில்களை நடத்துவோர் தங்களுக்குத் தேவையான இயந்திரங்களைச் சுலபமான தவணை முறையில் வாங்கிக் கொள்வதற்கான திட்டம் ஒன்றிற்கு சென்னை சர்க்கார் அங்கீகாரம் அளித்திருக்கின்றனர்.

இந்தத் திட்டத்தின்படி சிறிய தொழில்களைத் துவங்கி நடத்துவதற்கு வேண்டிய இயந்திர சாதனங்களை வாங்குவதற்கு வேண்டிய

(4-ம் பக்கம் பார்க்க)

மேலிடத்திற்கு தலைவணங்க மராட்டிய காங்கிரஸ் எதிர்ப்பு

'மொழிவழி மாநிலம் கோருவது மாநிலப் பித்தாகாது'

சங்கர்ராவ் தேவ் விளக்கம்

பூனு, நவ. 17—

"மராட்டியர் முன்னுள்ள சிக்கல், மராட்டியரின் நேர்மைக்கும், நன்னம்பிக்கைக்கும் தரப்படும் ஒரு அறைகூவலாகும்; மராட்டியர் அந்த அறைகூவலை ஏற்கச் சித்தமாயிருக்கின்றனர்.

"மராட்டியரைச் சந்தேகிப்பவர்களின் சந்தேகத்தை நாம் பேச்சுவார்த்தைகளின் மூலம் போக்க முடியும்.

"பம்பாய் நகருக்கு தனக்கென ஒரு தனி கலாச்சாரம் கிடையாது; எனவே, அது ஒரு தனி மாநிலமாக அமைவது முடியாத ஒன்றுகும். பம்பாயின் முக்கியத்துவமெல்லாம் அது ஒரு இரு மொழி மாநிலத்தில் இருக்கும்போதோ, அல்லது, சம்யுக்த மராட்டியத்தில் இருக்கும்போதோதான்,"

என்று, சங்கர்ராவ் தேவ் குறிப்பிட்டுவிட்டு மேலும் சொன்னர்:—

"எல்லா குஜராத்தி-மராத்தி வழங்கும் பகுதிகளையும் ஒன்றாக இணைத்து ஒரு இரு மொழி மாநிலம் அமைக்கும் கோரிக்கையை மராத்திய தலைவர்கள் இன்னும் விட்டுவிடவில்லை.

"குஜராத், பம்பாய், விதர்பம் ஆகிய மூன்றும் ஒரு கூட்டுக் குடும்பமாக வாழவிரும்பினல், நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறோம்; ஆனல், அதே நேரத்தில் மராட்டிய மக்கள் எவரையும் அந்தக் கூட்டுக் குடும்பத்தில் சேருமாறு நிர்ப்பந்திக்கமாட்டார்கள்.

"சம்யுக்த மராட்டியம் அமைப்பதற்கு உதவக்கூடிய எந்த ஒரு மாற்றுத் திட்டத்தையும் மராட்டியர் பரிசீலிக்கத் தயாராயிருக்கின்றனர்.

"இந்தியாவின் ஐக்கியத்திற்கு மொழிவழி மாநிலங்கள் இன்றியமையாதனவாகும்; ஆனல், மொழிவழி மாநிலம் கோருவோரெல்லாம் மாகாணப் பித்துக்கொண்டவர்கள் என்று பொருளாகாது."

★

மகாராஷ்டிர காங்கிரஸ் வேண்டுகோள்

மராட்டிய பிரதேசக் காங்கிரசும், அகில இந்திய காங்கிரஸ் செயற்குழுவின் பம்பாயைத் தனி மாநிலமாக்கும் முடிவை ஏற்றுக்கொள்வதாயில்லை என்று தெரிய வருகிறது.

"மராத்தி மொழி பேசும் மக்களின் வாழ்க்கையுடன் பம்பாய் நகரம் பல அம்சங்களில் பிணைந்துள்ளதென்றும், பம்பாய் நகர் இன்றி மகாராஷ்டிர மாநிலம் அமைக்கப்படுவது சரியல்ல என்றும், ஆகவே, காங்கிரஸ் காரியக் கமிட்டி தன்னுடைய யோசனையை மீண்டும் பரிசீலனை செய்யவேண்டுமென்றும் தீர்மானமொன்று நிறைவேற்றியுள்ளது.

பம்பாய் நகரை தனி மாநிலமாக்கினல், அதன் முக்கியத்துவம் போய்விடுமென்றும் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவிகுளம், பீர்மேடு தமிழர்கள்

'அகதிகளாக வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை'

மதுரை, நவ. 17—

"தேவிகுளம், பீர்மேடு பகுதிகளிலுள்ள தமிழர்களைக் கொடுமைப்படுத்துவது 1948-ல் ஆரம்பமாகி, இப்போதும் தீவிரமாக நடைபெற்றுவருகிறது; இந்தத் தாலுகாக்கள் கேரளத்துடன் சேர்க்கப்பட்டால், தமிழர்கள் அங்கிருந்து வெளியேறி, அகதிகளாக சென்னை மாநிலத்திற்கு வருவதைத் தவிர வேறு வழியில்லை,"

என்று, திரு-கொச்சி மாநில சட்டசபையின் தேவிகுளம், பீர்மேடு தொகுதி பிரதிநிதிகளின் தூதுக்குழு ஒன்று, காங்கிரஸ் தலைவர் தேபரைச் சந்தித்து, அப்பகுதிகள் தமிழ் நாட்டுடன் சேர வேண்டுமென்று கோரி தந்துள்ள 'மகஜர்' ஒன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

வடநாட்டிலா? தென்னட்டிலா?

மின்சாரத் தொழில்களுக்குத் தேவையான தளவாடங்களை உற்பத்தி செய்வதற்கு, இந்தியாவில் ஒரு தொழிற்சாலையை நிறுவுவதற்கு இந்திய சர்க்காருக்கும்—பிரிட்டிஷ் நிறுவனமொன்றுக்கும் இடையே ஒப்பந்தமொன்று கையெழுத்தாகியுள்ளது. 15 ஆண்டுகளுக்கு இந்த ஒப்பந்தம் அமுலில் இருக்கும்.

இந்தத் தொழிற்சாலையை எங்கு நிர்மாணிப்பதென்று நான்கு மாதங்களில் முடிவாகுமாம்.

காங்கிரஸ் மேலிடத்திற்கு

தெலிங்கான மக்கள் எதிர்ப்பு?

'விசால ஆந்திர' அமைப்பை ஏற்றுக்கொள்ள மாட்டார்களாம்!

செகந்தராபாத், நவ. 17—

"'விசால ஆந்திரா'வுடன் சேருவதை தெலிங்கான மக்கள் விரும்பவில்லை; உடனடியாக 'விசால ஆந்திரம்' அமைய வேண்டுமென்று காங்கிரஸ் மேலிடம் வற்புறுத்தினல், மக்கள் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்,"

என்று, டில்லியிலிருந்து திரும்பி வந்த ஐதராபாத் ரெவினியூ அமைச்சர் கே. வெங்கட ரெட்டி கூறியுள்ளார்.

சோவியத் கம்யூனிஸ்டு கட்சிச் செயலாளர் குருஷ்சேவ் வாழ்க்கை வரலாறு

நிகிதா சேர்ஜீயெவிச் குருஷேவ், சோவியத் யூனியன், சோவியத் சர்க்கார் கம்யூனிஸ்டு கட்சியின் பிரபல தலைவர்களில் ஒருவர்; இவர் கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் குழுவின் நிர்வாக சபையில் ஒரு உறுப்பினர்; கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் குழுவில் சுப்ரீம் சோவியத்தின் முதல் செயலாளர். சோவியத் ரஷ்யக் குடியரசின் சுப்ரீம் சோவியத்தின் அரசாங்க நிர்வாக சபையிலும் இவர் அங்கத்தினராக இருக்கிறார்.

குருஷேவ், குர்ஸக்குபெர்னியாவிலுள்ள கலினோவ்கா கிராமத்தில் 1894-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ந் தேதி தொழிலாளர் வகுப்புக் குடும்பத்தில் பிறந்தார்.

உள்நாட்டுப் போர் நடந்த போது, தென் முனையில் குருஷேவ் போரில் ஈடுபட்டிருந்தார்; உள்நாட்டுச் சண்டை முடிந்தவுடன் இவர் டோன்பாஸ் சுரங்கங்களில் வேலை செய்துவந்தார்; பின்னர் புரட்சியின் முதல். ஆண்டுகளில் ஏற்பாடு செய்யப்பட்ட வயது வந்தோருக்கான விசேடப் பள்ளிக்கூடங்களுள் ஒன்றில் கல்வி பயின்றார்; தொழிலாளர்கள் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றதற்குப்பின், டோன்பாஸ் பகுதியில் கட்சியின் முக்கியமானவர்களில் ஒருவராக ஆனார்; பின்னர், கீவ் பிரதேசத் தலைவராக விளங்கினார். 1929-ம் ஆண்டில் மாஸ்கோவிலுள்ள ஸ்டாலின் அகடமியில் அவர் சேர்ந்தார்; அங்கு கட்சிக் குழுவின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1931-ம் ஆண்டு ஜனவரி மாதம் இவர் பாவுமான் மாவட்டக் குழுச் செயலாளரானார்; பின்னர் மாஸ்கோவிலுள்ள க்ரஸ்னாயப்ரெஸ்னாய மாவட்டக் குழுச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

1932 — 34-ம் ஆண்டுகளில் குருஷேவ், முதலில் மாஸ்கோ குழுவின் இரண்டாவது செயலாளராகவும், பின்னர் முதல் செயலாளராகவும் பணி புரிந்து வந்தார்; கட்சியின் மாஸ்கோ பிராந்தியக் குழுவின் இரண்டாவது செயலாளராகவும் பணியாற்றினார். 1935-ம் ஆண்டில் அவர் கட்சியின் மாஸ்கோ பிராந்தியக் குழு, நகரக் குழுக்களின் முதல் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; 1938-ம் ஆண்டு வரை அவர் அப்பதவிகளை வகித்து வந்தார்.

1938-ம் ஆண்டு ஜனவரி மாதம், குருஷேவ், உக்ரேன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழுவின் முதல் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1947-ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை உக்ரேனியன் சோவியத் சோஷலிஸ்ட் குடியரசு மந்திரி சபையின் தலைவராக இருந்து வந்தார்; 1947-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் உக்ரேன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழுவின் முதல் செயலாளராக மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1949-ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை குருஷேவ் இப்பதவியிலேயே இருந்துவந்தார்.

1949-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 1953-ம் ஆண்டு மார்ச் மாதம் வரை அவர், மத்தியக் குழுச் செயலாளர் பதவியையும், கட்சியின் மாஸ்கோ பிராந்தியக் குழுவின் முதல் செயலாளர் பதவியையும் வகித்து வந்தார். 1934-ம் ஆண்டு முதல் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினராக இருந்து வருகிறார். 1938-ல் மத்தியக் குழுவின் அரசியல் பீரோவின் மாற்று உறுப்பினராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்; 1939-ம் ஆண்டில், கட்சியின் 18-வது காங்கிரஸ் கூட்டத்துக்குப் பின்னர், இவர் கட்சியின் மத்தியக் குழு அரசியல் பீரோவின் உறுப்பினராக ஆனார்.

1952-ம் ஆண்டில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரசின் 19-வது கூட்டத்தில், "சி. பி. எஸ் யூ. (பி)" விதிகளின் திருத்தங்கள் பற்றிய அறிக்கையைப் படித்தார். காங்கிரசில் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; மத்தியக் குழுவின் பொதுக்கூட்டத்தில் கட்சி மத்தியக் குழு நிர்வாக சபை உறுப்பினராகவும், மத்தியக் குழுவின் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்

1953-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் கூடிய கம்யூனிஸ்டு கட்சி மத்தியக் குழுக் கூட்டத்தில், குருஷ்சேவ், மத்தியக் குழு செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இரண்டாவது உலக யுத்தத்தில், குருஷ்சேவ் கீழ் விசேட இராணுவ பிராந்திய மிலிட்டரி கௌன்சில், தென் மேற்கு முனை இராணுவ கௌன்சில், ஸ்டாலின்கிராட், தெற்கு முதல் உக்ரேனியன் முனை இராணுவ கௌன்சில்கள் ஆகியவற்றின் உறுப்பினராக இருந்தார்.

பொருளாதாரத் தலைமை பூண்டு அரும்பெரும் சாதனைகள் செய்தமைக்காகவும் இரண்டாது உலகப் போரில் கட்சியினாலும், சர்க்காராலும் கொடுக்கப்பட்ட காரியங்களை வெற்றிகரமாக முடித்தமைக்காகவும், 'லெனின் ஆர்டர்' கௌரவங்கள் மும்முறை வழங்கப்பட்டார்; சுவோரோவ் ஆர்டர் முதலாவது, இரண்டாவதும், 'குருசோவ்' ஆர்டர்' முதல் வகுப்பும், 'நாட்டுப் பற்று யுத்தவரிசை ஆர்டர்' முதல் வகுப்பு, 'ஆர்டர் ஆப் ரெட் பேன்னர் — தொழிலாளர்' கௌரவங்களும், மூன்று பதக்கங்களும் வழங்கப்பட்டன.

குருஷசேவின் 60-வது பிறந்த தினத்தில், கம்யூனிஸ்டு கட்சிக்கும் சோவியத் மக்களுக்கும் இவர் செய்துள்ள மகத்தான சேவைகளைப் பாராட்டுமுகத்தான் 1954 ஏப்ரல் 16-ந் தேதியிட்ட சோவியத் சுப்ரீம் சோவியத்தின் அரசாங்க நிர்வாக சபையின் உத்திரவுப்படி, இவருக்கு 'சோவியத் தொழிலாள வீரர்' பட்டம் வழங்கப்பட்டது.

(இத்துடன் 'லெனின் ஆர்டர்' கௌரவமும், சுத்தி, கதிர் அறுக்கும் அரிவாள், தங்க நட்சத்திரப் பதக்கமும் சார்ந்துள்ளன.)

இந்திய சமுதாய நலத் திட்டம்

காந்திய அடிப்படையைக் கொண்டதாம்!

இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டுள்ள சமுதாய அபிவிருத்தித் திட்டங்களைப் பரிசிலீத்துள்ள ஐ நா. நிறுவனம் ஒன்றின் பிரசுரம் ஒன்று, அத்திட்டத்தை, சமீப காலத்தில் சமுதாய நலனுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்களுள் எல்லாம் மிகவும் விரிவான ஒரு 'தேசிய திட்டம்' என்று வர்ணித்திருக்கிறதாம்!

இந்தியாவின் சமுதாய அபிவிருத்தித் திட்டம், காந்திய தத்துவத்தையும், வாழ்க்கை முறையையுமே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்றும், தேசத்துக்கு சுதந்தரம் கிடைத்தபின் தேசிய வாழ்க்கையும், சர்க்கார் நடவடிக்கைகளும் புத்துயிர் பெற்று அதி தீவிரமாக நடைபெற்று வருகின்றன என்றும், இந்தியத் தலைவர்கள் 'துரித உணர்ச்சி'யுடனும் 'பொறுப்புணர்ச்சி'யுடனும் நடந்து வருகிறார்கள் என்றும் மக்களிடையே அவ்வுணர்ச்சிகள் வேரூன்றுவதற்கு வழி செய்கிறார்கள் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

டேராடூனில் தொழில் நுட்பப் பயிற்சி

இந்தியாவில் காகிதத் தயாரிப்புத் தொழிலுக்குத் தேவையான தொழில் நுட்ப ஊழியர்கள் கிடைக்கும்படி செய்வதற்காக உயர்தரப் பயிற்சிக்கும், தொழிலாளர் பயிற்சிக்கும் இரண்டு பாட வகுப்புக்களை நடத்தவேண்டுமென்று மத்திய சர்க்கார் உணவு விவசாய இலாகா பாடத் திட்டக் குழு சிபாரிசு செய்துள்ளபடி, அந்த இரு வகுப்புக்களும், டோராடூன் வன ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்படுமாம்.

பாழ் நிலங்களைப் பயிர் நிலங்களாக மாற்றும் சூரிய சக்தி!

சோதனைக் கூடம் நிறுவுவதற்கு முயற்சி; 30 நாடுகளின் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி!

சூரிய சக்தியைக்கொண்டு கடல் நீரை நல்ல தண்ணீராக மாற்றி, குடிப்பதற்கும், வறட்சியான நிலங்களில் பயிர் செய்வதற்கும் பயன்படுத்தலாம்; கடலிலிருந்து நல்ல தண்ணீர் ஓடி வந்து பாழ் நிலங்களைப் பயிர் நிலங்களாக்கும் காலம் விரைவில் வருமாம்!

1957-ம் ஆண்டுக்குள், 1,30,00,000 குடும்பங்கள் சூரிய சக்தியால் அனல் பெறும் இல்லங்களில் வாழும் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்களாம்!

அமெரிக்க நாட்டின் அரிஸோனாவில் சூரிய சக்தி' விஞ்ஞானிகளின் சர்வதேச நிறுவனம் ஒன்று நிறுவுவதற்குத் திட்டங்கள் நடைபெறுகின்றன. அது சூரிய சக்தியை ஆராயும் சோதனைக்கூடம் எனப்படும். அத் திட்டத்துக்கு ஆண்டுக்கு 10 இலட்சம் டாலர் உதவி எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கு நடைபெற்ற முதல் சர்வதேச சூரிய சக்தி மாநாட்டால் ஏற்பட்டதே இந்தத் திட்டம் 30 நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளும் எஞ்சினீயர்களும், தொழில் அதிபர்களும் இங்கு ஆறுநாள் கூடி ஆராய்ச்சி செய்தார்கள். எல்லா நாடுகளிலும் சூரிய சக்தியைப் பயன்படுத்துவது பற்றிச் செய்யப்படும் ஆராய்ச்சியை ஒன்றுபடுத்தி விருத்தி செய்ய வேண்டுமென்று அவர்கள் கருதினார்கள்

மின்சாரக் கம்பெனித் தலைவர் ஹென்ரி பி. சார்ஜண்ட் சூரிய சக்தி ஆராய்ச்சிச் சோதனைக் கூடத்தைப் பற்றிய திட்டங்களைத் தெரிவித்தார்.

"சூரியனிலிருந்து கிடைக்கும் சக்தியால் உடனே பொருளாதார வாய்ப்புகள் ஏற்படும்; சில காரியங்கள் இப்பொழுதே செய்யப்பட்டிருக்கின்றன; சூரிய சக்தியால் எஞ்சின்கள் இயக்கப்பட்டுள்ளன. சூரிய சக்தியால் இயங்கும் பம்புகளால் தண்ணீர் இறைக்கப்பட்டிருக்கிறது; சூரிய உலைகள் அதிக வெப்பம் தோற்றுவித்துள்ளன; சூரிய அடுப்புகளால் நமக்கு வேண்டிய உணவைச் சமைக்க முடியும்; சூரிய சக்தியைக்கொண்டு, வீடுகள், குளிர்போக்கும் அனல் பெற்றுள்ளன" என்றெல்லாம் கூறப்பட்டுள்ளன.

'சூரிய சக்தியால் அனலும், குளிரும் பெறும் வீடு ஒன்றை அமைக்கும் சர்வதேசப் போட்டி ஒன்று நடைபெறும்,' என்று, மாநாட்டுப் பிரதிநிதிகளுக்குச் சொல்லப்பட்டது.

கூரையில் ஒரு பெட்டகத்திற்குள் 10 டன் பொடிக் கற்கள் அடுக்கி வைக்கப்படும். அதில் சூரிய வெப்பம் சுவரப்பட்டுத் தொகுத்து வைக்கப்படும். அந்தக் கூரை வழியாய்க் காற்று வீடு முழுவதும் செலுத்தப்படும். எனவே பழைய முறையில் கட்டப்பட்ட வீடு முழுவதும் அனல் காற்று பரவும்.

வடநாட்டு மாநிலங்கள் வளம்பெறுவதற்கு திட்டம்

சட்லெஜ் நதி நீரைத் தேக்கிவைக்க உருவாகும் பிரம்மாண்டமான சாதனம்

பக்ரா அணைக்கட்டு வேலையில், 300 எஞ்சினீயர்கள், தொழில் நுட்பச் சிப்பந்திகள், தொழில் நுட்பமல்லாத சிப்பந்திகள் ஆகியோர் 2000 பேர்கள், 7000 தொழிலாளர்கள் சேர்ந்து 3½ ஆண்டுகளாக ஈடுபடுவர்.

1959—60-ல் பக்ரா-நங்கல் திட்டம் முடிவடையும்போது விவசாயம் விருத்தியடைவதுடன், இதனால் பயன்படும் பகுதிகளான பஞ்சாப், பெப்சு, இமாசலப் பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் தொழில்வளர்ச்சி ஏற்படும்; இலட்சக்கணக்கானவர்கள் வேலை பெறுவார்கள்; சாதாரண மக்களின் பொருளாதார நிலையும் உயரும்.

உலகத்திலேயே பக்ரா அணை இரண்டாவது பெரிய அணையாக இருக்கும்; ரூ. 170 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கும் பல காரிய பக்ரா-நங்கல் திட்டத்தின் ஒரு பகுதியேயாகும் இந்த அணை.

இவ்வணை டில்லிக்கு வடக்கே சுமார் 200 மைல் தூரத்தில் இமாலய மலை அடிவாரத்தில், சட்லெஜ் நதி தண்ணீரைத் தேக்கிவைப்பதற்காகக் கட்டப்படுகிறது.

இந்த அணை சர்க்கார் இலாகாவினராலேயே கட்டப்படும்; இதில் இதற்காக இடையாட்களோ, 'காண்டிராக்டர்'களோ அமர்த்தப்படமாட்டார்கள். இதற்காகப் பிரத்தியேகமான அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

முக்கிய பக்ரா அணை இருக்கும் இடத்தில் அமைக்கப்படும் நீர்விசை மின்சார நிலையத்தில், ஒவ்வொன்றும் 85,000 முதல் 90,000 கிலோவாட் உற்பத்தி செய்யக் கூடிய 9 மின்சார உற்பத்தி இயந்திரங்கள் நிர்மாணிக்கப்படும். மின்சக்தி தேவை அதிகமாக இருந்தால் பின்னர் பத்தாவது இயந்திரம் ஒன்றும் ஏற்படுத்தப்படும். இதிலிருந்து கிடைக்கும் மின்சாரம் பஞ்சாப், பெப்சு, இமாசலப் பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் பயன்படுத்தப்படும்.

சட்லெஜ் நதித் தண்ணீரை நங்கல் ஹைடெல் கால்வாயில் திருப்பி விடுவதற்காக 95 அடி உயரமுள்ள நங்கல் அணை, 1954ல் கட்டி முடிக்கப்பட்டவுடன், பஞ்சாப், பெப்சு, இராஜஸ்தான் பிரதேசங்களுக்குக் கோடை மாதங்களில் இடைக்கால நிவாரணமாகத் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டது. பக்ரா அணைக்கட்டுக்குக் கீழ்ப்புறம் 8 மைல் தூரத்திலுள்ள இந்த அணை, ஹைடெல் கால்வாயை ஒட்டி நிர்மாணிக்கப்பப்படவிருக்கும் மின்சார உற்பத்தி நிலையங்களுக்குச் சமன நீர்த்தேக்கமாக இருக்கிறது.

நங்கல் அணைக்குக் கீழ்ப்புறம் ஹைடெல் கால்வாயை அடுத்து, 12 மைல் தூரத்தில்தான் கங்குவால் மின்சார நிலையம் உள்ளது; இதன் உச்ச உற்பத்தி 72,000 கிலோவாட்டாக இருக்கும்; இவ்வாண்டு ஆரம்பத்தில் திறக்கப்பட்ட இந்த நிலயம், இப்பொழுது டில்லிக்கும், பஞ்சாபில் பலவிடங்களுக்குமாக 48,000 கிலோவாட் மின்சாரம் விநியோகம் செய்து வருகிறது. ஹைடெல் கால்வாயை அடுத்து, கங்குவால் நிலயத்தின் உற்பத்தி சக்தி அளவு உற்பத்தி செய்யக்கூடிய மற்றொரு நிலையமும் கோட்லாவில் கட்டப்பட்டு வருகிறது; இதன் வேலை முடிவடையும் தருவாயில் உள்ளது. இதில் மின்சார உற்பத்தி வேலை அடுத்த ஆண்டு தொடங்கிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரூ. 2 கோடியில் நங்கல் நகரம்!

பக்ரா-நங்கல் திட்டம் முழுமைக்கும் முக்கியமான பகுதி நங்கல் நகர அமைப்புத்தான்; இந்நகரம் சுமார் ரூ 2 கோடி செலவில் கட்டப்பட்டது; திட்ட வேலையில் ஈடுபட்டுள்ள சுமார் 15,000 தொழிலாளர்களுக்கு இந்தக் காலனியில் வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. மற்றும் மருத்துவ விடுதிகள், பள்ளிக்கூடங்கள், பொழுது போக்கு வசதிகள், பிரசவ, குழந்தைகள் பராமரிப்பு நிலயங்கள் முதலியவையும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இது தவிர, பழுது பார்க்கவும், உருக்குப் பொருள்கள் உற்பத்திக்காகவும் ஒரு பெரிய தொழிற்சாலை இருக்கிறது; பக்ரா கட்டுமானத்துக்குத் தேவைப்படும் பொருள்கள் 6000 டன் உருக்கு எடைக்கு இத்தொழிற்சாலை இதுவரை உற்பத்தி செய்திருக்கிறது. உள்ளூரிலேயே செய்யக்கூடிய கட்டுமான சாமான்களும், உதிரி பாகங்களும் நங்கலிலேயே செய்யப்படுகின்றன. இதனால் செலவு எவ்வளவோ குறைகிறது.

ஈரான் பிரதமரைக் கொல்ல முயற்சி!

ஈரான் பிரதம மந்திரியான உசேன் அலாகான், இன்று 33 வயதான ஜாபராலிஜோல் கதார் என்பவனால் கழுத்தில் சுடப்பட்டார்

உடனே பிரதமர், மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, காயத்திற்கு சிகிச்சை அளிக்கப்பட்டார்; அவரைக் கவனித்த டாக்டர்கள் அவர் உயிருக்கு ஆபத்து எதுவும் இல்லை என்று தெரிவித்திருக்கின்றனர்.

மசூதி ஒன்றிற்கு தொழுகைக்காகச் சென்று திரும்பும்போது அவர் சுடப்பட்டிருக்கிறார்.

மதத் தலைவரான முல்லா காஷானி என்பவரின் குமாரரான சையத் முஸ்தபா காஷானி என்பவர் இரண்டு நாட்களுக்கு முன்பு இறந்துபட்டதை முன்னிட்டு, பிரதம மந்திரி மசூதிக்குச் சென்றார்.

இதற்கு முன்பாக 1951-ல், உசேன் அலாகான் உயிரைக் குடிக்க நடைபெற்ற சதி ஒன்று அப்போது கண்டுபிடிக்கப்பட்டது. இப்போது கடந்த ஏப்ரல் திங்களில் தான் உசேன் அலாகான் மீண்டும் பிரதமராகியிருந்தார்.

விருதுபெற்ற வீரர்கள்

சர்க்கார் நிலை விளக்கம்

'அசோக சக்கரம்' வழங்கப்பட்ட வீரர்களுக்குப் பண உதவி அளிப்பது பற்றிய பிரச்சினை தெளிவாக்கப்பட்டிருக்கிறது. ஏழ்மை நிலைமையிலுள்ள 'அசோகர் சக்கரம்' பெற்ற வீரர்களுக்கு மட்டுந்தான் பண உதவி கொடுக்கப்பட வேண்டும் என்று இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர்.

இந்நிலையிலுள்ளவர்கள் வெகு சிலரே இருப்பார்கள் என்றும் கருதப்படுகிறது.

'அசோக சக்கரம்' வழங்கப்பட்ட வீரர்கள் யாவருக்கும்— அவர்களின் பொருளாதார நிலைமை எப்படியிருந்தபோதிலும், பண உதவியும் அளிக்கப்படுவரும் என்ற ஒரு தவறான எண்ணம் பொதுவாக இருந்து வருவதை அகற்றுவதற்காகத்தான் இந்த விளக்கம் வெளியிடப்பட்டிருக்கிறது.

சம்யுக்த மராட்டியம் கோரி சட்டசபை முன் ஆர்ப்பாட்டம்!

தடியடி ; ஆறு முறை கண்ணீர்ப் புகைப் பிரயோகம்!

பம்பாயில் கிளர்ச்சி: 450 பேர்கள் கைது!

பம்பாய், நவ. 18—

பம்பாய் நகரைத் தலைநகராகக்கொண்டு, சம்யுக்த மராட்டியம் அமைக்கக் கோரி, இன்று பம்பாய் சட்டசபைமுன் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தியபோது அவர்களைக் கலைக்க போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததுடன், ஆறு முறைகள் கண்ணீர் புகைப் பிரயோகமும் செய்திருக்கின்றனர்.

ஆர்ப்பாட்டங்களை ஒட்டி 450 பேர்களுக்கும் மேலாக போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

தடியடிப் பிரயோகத்தால் இருவருக்கு மட்டுமே காயம் ஏற்பட்டதாகப் போலீசார் தகவல் தந்திருக்கின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களை இடதுசாரிக் கட்சியினரும், தொழிற்சங்கத்தவரும் ஏற்பாடு செய்து நடத்தியிருக்கின்றனர்.

சுமார் 3,000 பேருக்கு அதிகமாயிருந்த கூட்டத்தினர், தாங்கள் சட்டசபைத் தலைவரைச் சந்தித்து சம்யுக்த மராட்டியக் கோரிக்கை அடங்கிய மனு ஒன்றைத் தர விழைவதாகத் தெரிவித்திருக்கின்றனர்.

பல பிரிவுகளாக சட்டசபைக்குள் நுழைய முயற்சித்த போராட்டக்காரர்களை ஏராளமான போலீசார் தடுத்து நிறுத்தி, தடியடியும், கண்ணீர்ப்புகைப் பிரயோகமும் செய்து கலைத்திருக்கின்றனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் விடுவிக்கப்பட்டுவிட்டனர் என்றாலும், ஆர்ப்பாட்டங்களுக்குத் தலைமை வகித்த சில தலைவர்கள் இன்னும் காவலிலேயே வைக்கப்பட்டிருக்கின்றனராம்.

★

பம்பாய் நகரைத் தனி மாநிலமாக்க!

சட்டசபையில் முதன் மந்திரி தீர்மானம்

பம்பாய், நவ. 18—

காங்கிரஸ் செயற்குழு முடிவு செய்திருக்கிறபடி, பம்பாய் நகரம், மராட்டியம், குஜராத்தியம் — என்று, மூன்று மாநிலங்கள் அமைப்பது குறித்து பம்பாய் முதன் மந்திரி மொரார்ஜி தேசாய் சட்டசபையில் கொண்டுவந்த தீர்மானம் இன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மராட்டிய காங்கிரஸ் உறுப்பினர்கள் எவரும் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

மராட்டியரின் கோரிக்கை குறித்து 'ரெவினியூ' மந்திரி பி எஸ். ஹிரே, சட்டசபையில் அறிக்கை ஒன்று தாக்கல் செய்வார் என்று தெரிய வருகிறது.

மொரார்ஜி தேசாய் விவாதத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில், உறுப்பினர்கள் தீர்மானம் குறித்து கருத்தறிவிக்கையில், சபையின் கௌரவத்தைக் குலைக்காத வகையில் நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டதை எதிர்க்கட்சியினர் ஏற்று நடந்து கொண்டிருக்கின்றனர்.

பம்பாய் சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவர் என்ற முறையில், மொரார்ஜி தேசாய் காங்கிரஸ் உறுப்பினர் கூட்டத்தில் பேசுகையில், அகில இந்திய காங்கிரஸ் மூன்று மாநிலங்கள் அமைக்க வேண்டும்—என்று செய்துள்ள முடிவுக்கு எதிராக உறுப்பினர்கள் வாக்களிக்கக்கூடாது என்றும், வேண்டுமானால் வாக்களிக்காமல் ஒதுங்கி நின்று கொள்ளலாம் என்றும் கூறியிருக்கிறார்.

நெல்சன் கம்பெனி கதவடைப்பு

"சென்னை நெல்சன் அண்டு கம்பெனி," முதலாளிகட்கும்—தொழிலாளிகட்கும் ஏற்பட்டுள்ள சில மனக்குறைகளால் 15-11-55 முதல் மூடப்பட்டுக் கிடக்கிறது. இதற்குக் கட்சி மனப்பான்மையே முதற் காரணம் என்று தெரிகிறது. கம்பெனி முதலாளிகள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களென்பதும், அதன் தொழிற்சங்கம் 'கம்யூனிஸ்டு' கட்சியைச் சார்ந்தவர்களால் நடத்தப்படுகிறதென்பதும் தெளிவு. ஆனால், தொழிற் சங்கத்திலுள்ள ஆட்களை நோக்குங்கால், அதில் கால் பாகத்தினர் காங்கிரஸ் கட்சியினராகவும், அரை பாகத்தினர் எக்கட்சியையும் சாராதவராயும், மீதமுள்ளவர்கள் ஆர். எஸ். எஸ்., தி. மு. க., தி க முதலிய பல்வேறு கட்சியில் பற்றுள்ளவர்களாகவும் இருப்பதாகத் தெரிகிறதே தவிர, அசல் கம்யூனிஸ்டுகளாக ஒருவரைக் கூட பொறுக்கியெடுக்கத்தக்க நிலையில் இல்லை.

"தங்கள் யூனியனை தங்கள் சொற்படி நடத்திப் போக தொழிற் கட்சியில் அனுபவம் வாய்ந்தவராக இருக்கவேண்டும் என்னும் காரணத்தைக் கொண்டேதான், அவர்கள், தலைவர்களைத் தேர்ந்தெடுத்திருப்பதாகத் திட்டவட்டமாகத் தெரிகிறது இந்நிலையில் முதலாளிகளும் கதவடைப்பை செய்து, தொழிலாளர் குடும்பங்களைப் பட்டினி போட்டு வதைப்பது நன்மையெனத் தோன்றவில்லை. முதலாளிகளுக்கும் - தொழிலாளர்களுக்கும் நடுவேயுள்ள சிலருடைய சுயநல எண்ணமும், சுரண்டல் கொள்கையுமே இந்த விபரீத விளைவுக்குக் காரணமென்றும், இதனால் முதலாளிகள் தங்கள் மனத்தை மாற்றி தொழிலாளர்களிடமே நேர்முகமாகப் பேச்சு வார்த்தை நடத்தி, தற்போது எவ்வித நிபந்தனையுமின்றி கதவடைப்பை நீக்கி, 12—11—55ல் ஏற்பட்ட சுமூகமான திட்டப்படி தொழிலை நடத்துவார்களென எதிர்பார்க்கிறேன்" என்று, காஞ்சி—அரங்கம். துரைசாமி அவர்கள் அறிவிக்கிறார்

தவணை முறையில்.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போதிய பண வசதி இல்லாதிருப்போருக்கு கைத்தொழில் இலாகா அவர்களுக்குத் தேவைப்படும் இயந்திரங்களைப் பெற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்யும்.

இயந்திரத்தின் மொத்த விலையில் சுமார் 20 முதல் 40 சத விகிதத் தொகையை முன் பணத் தொகையாக சர்க்காருக்குக் கட்ட வேண்டும். 'தேசிய சிறிய விகித தொழில்கள் நிறுவனம்' மூலமாக தேவையான இயந்திரங்களைப் பெற்றுத் தர கைத்தொழில் இலாகா ஏற்பாடு செய்யும்.

உண்மையான நபர்களுக்கு உதவி கிடைக்க உத்திரவாதம் செய்துகொள்வதற்குத்தான் மேற்படி பூர்வாங்க முன்பணம் கோரப்படுகிறது.

இந்தியாவில் ரஷ்ய...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

திட்டத்தினை இப்போது ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வருவதாயும், தொழிற்சாலையை இயக்குவதற்கு இந்திய நிபுணர்களைப் பயிற்றுவிக்கவும் திட்டத்தில் வழி இருக்கும் என்றும் அந்த வானொலி அறிவிப்புத் தெரிவிக்கிறதாம்.

சேலம் மாவட்டத்தில் அண்ணாதுரை

சுற்றுப்பயணம்

20—11—55 காலை 10-மணி: சேலம் நகரம்—சிறப்புக் கூட்டம் (சித்தேஸ்வரா டாக்கீஸ்)
மாலை 6 மணி: பொதுக்கூட்டம் (வி. மார்க்கெட்)

21—11—55 மாலை 5 மணி: எடப்பாடி - பொதுக்கூட்டம்;
இரவு 7 மணி: திருச்செங்கோடு—பொதுக்கூட்டம்;
இரவு 11 மணி: மேட்டூர்—நாடகத் தலைமை

22—11—55 காலை 9 மணி செல்லப்பம்பட்டி — பஞ்சாயத்து போர்டு வரவேற்பு;
காலை 10 மணி: நாமக்கல் வட்ட தி. மு. கழக ஊழியர் கூட்டம்;
மாலை 4 மணி: காவேட்டிபட்டி பஞ்சாயத்து போர்டு வரவேற்பு;
மாலை 4-30 மணி: கந்தம்பாளையம் தி.மு.க. வரவேற்பு;
மாலை 5 மணி: பாண்டமங்கலம்—பொதுக்கூட்டம்;
இரவு 7 மணி: நாமக்கல்—பொதுக்கூட்டம்;
இரவு 10 மணி: 'வீர வாலி' நாடகத் தலைமை

23—11—55 காலை $10\frac{1}{2}$ மணி: நீர்முள்ளிக்குட்டை - பொதுக்கூட்டம்;
மாலை 4 மணி: மல்லியகரை—பொதுக்கூட்டம்;
மாலை 6 மணி: ஆணையாம்பட்டி—பஞ்சாயத்து போர்டு வரவேற்பு;
இரவு 7 மணி: ஆணையாம்பட்டி பொதுக்கூட்டம்;
இரவு 11 மணி: ஆத்தூர்—நாடகத் தலைமை.

கழகக் கூட்டங்கள்

☆

சிவகாசி

21—11—55 மாலை 6 மணிக்கு

பேசுபவர்:

முகவை ஆர். எஸ். பாண்டியன்

★

மேலச்சின்னணம்பட்டி (மதுரை மா.)

22—11—55 செவ்வாய் மாலை

பேசுவோர்:

ஈ. வே. கி. சம்பத்
எஸ். முத்து
கே. எஸ். சந்தானம்
பி. எஸ். மணியன்

★

மேலக்காட்டூர்

22—11—55 மாலை 5 மணிக்கு, பெருமாள் கோவில் சன்னதியில், முத்தமிழ் நாடக மன்றச் சார்பில் தி. மு கழகப் பொதுக்கூட்டம் தோழர் தி. துரைராசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பொ. தருமன், ம. கோ. மணி, மோகன், என். அசோகன், மு. சாமிநாதன், எம். வேலன் ஆகியோர் பேசுவர்.

சென்னை 40-வது வட்ட தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

20—11—55 காலை 9-30 மணியளவில், சென்னை—சேப்பாக்கம் லால்பேகம் வீதி, எண் 4-ல், 40-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். வரவு-செலவுக் கணக்குகள், மற்றும் பல பிரச்சினைகள் பற்றி அதுபோது ஆராயப்படும்.

சென்னை 47-வது வட்ட தி. மு. கழக அமைப்பு

20—11—55 மாலை 4 மணியளவில், சென்னை சைதாப்பேட்டை, ஜோன்ஸ் ரோட், எண் 155 இல்லத்தில் நடைபெறவிருக்கும் 47-வது வட்ட தி மு. கிளைக் கழக அமைப்புக் குழுக் கூட்டம் நடைபெறும்.

ஆசிரியருக்குக் கடிதம்

தென் பகுதி இரயில்வே மென் யூனியன் திருச்சி கிளைத் தோழர்கள் விளக்கம்

ஆசிரியர்: 'நம் நாடு'

ஐயா,

சென்ற சில தினங்களாக, தென் பகுதி இரயில்வே மென் யூனியன் மத்திய சங்க நிர்வாகிகள் என்பவர்களின் பெயரில் அறுவர் கையொப்பமிட்ட அறிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன.

அதில், அவர்கள், மத்திய சங்கத் தலைவர் தோழர் இராகவானந்தம், யூனியன் கொள்கைக்குப் புறம்பாகவும், அதன் வளர்ச்சியைக் கெடுக்கும் வகையிலும் நடந்துவருவதாகக் குற்றஞ்சாட்டி, 'பதவி மோகம் பிடித்துவிட்ட அவருடைய தலைமையில் நம்பிக்கையில்லை' என்று கூறியிருக்கின்றனர். ஆனால், எந்த முறையில் தோழர் இராகவானந்தம், யூனியன் கொள்கையைப் புறக்கணித்தார்—அவருடைய எந்த நடவடிக்கை யூனியன் வளர்ச்சியைக் குலைக்கக் கூடியது—என்றும், யூனியன் நிர்வாகக் குழுவின் நம்பிக்கையை இழந்திடத்தக்க இழிசெயல் என்ன செய்திருக்கிறார் என்றும் அவர்கள் விளக்கவில்லை—விளக்கமாட்டார்கள்—விளக்க முடியாது.

யூனியன் கொள்கைகளில் பற்றும் நம்பிக்கையும், யூனியன் வளர்ச்சியில் ஆர்வமும், அக்கரையும் தொழிலாளர்களின் நலம் பேணும் நல்லெண்ணமும் சிறிதளவாவது இருக்குமானால், அவர்கள் செய்ய வேண்டியது யூனியன் மத்திய நிர்வாகக் குழுவைக் கூட்டுமாறு தலைவரையோ அல்லது பொதுச்செயலாளரையோ கேட்டு, அப்படிக் கூட்டப்பட்ட கூட்டத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர வேண்டும். இதைத்தான் நாகரிகப் பண்பும், சராசரி அறிவும் கொண்ட எவரும் செய்வார்கள். ஆனால், இவர்கள் எதையும் சிந்திக்காமல் அறிக்கைவிட்டுவிட்டார்கள். சில கிளைகளின் நம்பிக்கையை இழந்துவிட்ட கூட்டுப் பொதுச்செயலாளர் தோழர் சச்சிதானந்தம் இதை மறைப்பதற்காகவும், தன் போன்றவர்களின் ஆதிக்கம்தான் யூனியனில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடும் நாகரீகப் பண்புக்குப் புறம்பானதுமான செய்கைகளில் ஈடுபட்டு, பொதுச் செயலாளர் தோழர் வீராசாமி இராஜினாமாச் செய்யும்படியான நெருக்கடியை உண்டாக்கிவிட்டார்.

இரயில்வே தொழிலாளர் நலன் தவிர வேறு வழிகளில், யூனியன் கவனம் செலுத்தக்கூடாது—அரசியல், கட்சி பேதங்கள் யூனியனில் தலைகாட்டக்கூடாது—என்ற உயர்ந்த எண்ணம் கொண்டிருக்கிறார் என்ற ஒன்றைத்தவிர, தலைவர் செய்த குற்றம் என்ன? இந்தக் குற்றத்திற்காகத்தான் அவர்மீது நம்பிக்கை இல்லை—இதைக் கூறுவதற்காக ஒரு மாநாடு—அதுவும், யாரும் வரமுடியாத ஒரு திங்கட்கிழமையில்!

பொன்மலை, திருச்சி கிளைகளின் நடவடிக்கைகள் ஒரு குறிப்பிட்ட நாலு, ஐந்து பேருடைய சூழ்ச்சித் தவிர வேறில்லை என்பது இந்தப் பகுதி தொழிலாளத் தோழர்கள் நன்கு அறிந்திருக்கின்றனர்.

அன்புள்ள

1 பொன். பரமசிவம், திருச்சிக் கிளைத் தலைவர்
2. முத்துக்கிருட்டிணன், துணைச் செயலாளர்
3. சோ. சண்முகம், செயற்குழு உறுப்பினர்
4, பரமசிவம், செயற்குழு உறுப்பினர்
5. முத்துசாமி, செயற்குழு உறுப்பினர்.

★

எஸ். ஆர். எம். யூ. சென்னை கிளை செயற்குழு கூட்டம் நிறைவேற்றிய தீர்மானங்கள்

தென்பகுதி இரயில்வே மென் யூனியன் சென்னை கிளையின் செயற்குழு கூட்டம் சைதையில் 17-11-55 வியாழன் மாலை சுமார் $6\frac{1}{2}$ மணிக்கு கிளைத் தலைவர் திரு டி. நல்லப்பன் தலைமையில் நடைபெற்றபோது, கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

1. மத்திய சங்க கூட்டுப் பொதுச் செயலாளரின் தற்போதைய தான்தோன்றித்தனமான போக்கு யூனியன் வளர்ச்சியை பாதிப்பதாகவும், ஒற்றுமையைக் குலைப்பதாகவும் இருப்பதால் அவரின் போக்குக்கு இக்குழு வருந்துவதுடன், மிக வன்மையாகவும் கண்டிக்கிறது.

2 மத்திய சங்கத் தலைவரின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்த கூட்டுப் பொதுச் செயலாளரும், மற்ற அறுவரும் முறைப்படி ம. ச. செயற்குழுவில் (சி இ சி) அதை நிறைவேற்ற வேண்டுமேயல்லாது, தங்கள் விருப்பப்படி பத்திரிகையில் வெளியிட்டது யூனியன் சட்ட திட்டங்களுக்கு முரணானது என இக்குழு கருதுகிறது

3. 4—12—55ல், மத்திய சங்கத் தலைவர் ம. ச. செயற்குழுவைக் கூட்டுவதாக முறைப்படி அறிவித்திருந்தும், கூட்டுப் பொதுச்செயலாளர் 21—11—55ல், மண்டபத்தில் மத்திய செயற்குழுவை (சி. இ. சி) நடத்துவதற்கு, ம. ச. தலைவர் அனுமதியின்றியே ஏற்பாடு செய்துகொண்டது யூனியனில் ஒழுங்கற்ற தன்மையை உண்டாக்குகிறது என்பதை எடுத்துக் காட்டுவதோடு, அதில் நிறைவேற்றப்படும் எந்தத் தீர்மானமும் இக்கிளையைக் கட்டுப்படுத்தாது என முடிவு செய்து, மற்ற கிளைகளையும் அதில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டாமென இக்குழு கேட்டுக்கொள்ளுகிறது.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

20—11—55 ஞாயிறு மாலை 6 மணியளவில், சென்னை இராயபுரத்திலுள்ள வடசென்னை தாளமுத்து நடராசன் முன்னேற்ற மன்றத்தில், சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். தோழர் என். வி. மதிவண்ணன் தலைமைதாங்குவார். தோழர்கள் இ. அன்பானந்தன், எம். முனுசாமி, தாஸ். சாமிநாதன் ஆகியோர் பேசுவர்.

20-11-55 காலை $9\frac{1}{2}$ மணிக்கு சென்னை — ஸ்ட்ரான்ஸ் ரோடு பகுதியிலுள்ள (19-வது வட்டம்) ராமானுஜம் தோட்டத் தெரு, திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றத்தில் தோழர் அன்பானந்தன் தலைமையில் நடைபெறும். 'சிந்தனையும்-செயலும்' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

20—11—55 காலை 10 மணிக்கு சென்னை 27-வது வட்ட அறிவியக்க மன்றத்தில், தோழர் ஆ. தனபால் தலைமையில் நடைபெறும். 'கடமை' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

சென்னை கல்விச் சங்கம்

20—11—55 மாலை 5 மணிக்கு, சென்னை-பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோட், ஆண் பள்ளியில், 'அன்பும் அறனும்' எனும் பொருள் பற்றி தோழர் கே. வி. இராமகோட்டி தலைமையில், தோழர் க.வீ.வரதன் பேசுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.